# எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள்




‘ விடுதலை வேள்வியில் தமிழகம் ’ நூல் வெளியிடப்பட்ட பிறகு 2002 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களை சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து அந்நூல் பிரதியை அளித்து உரையாடியபோது எடுத்தபடம். இச்சந்திப்பின் போது எம்முடன் வந்திருந்த மார்க்சீயஅறிஞர் எல்.ஜி. கீதான்ந்தன் அவர்கள் உடனிருந்தார்.

பள்ளி மாணவனாக இருந்த காலத்திலிருந்தே எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களின் படைப்புகளில் பரிச்சயம் இருந்ததோடு. அவரைப் பார்த்த அனுபவமும் அவரின் சில உரைகளைக் கேட்கிற வாய்ப்பும் கிடைக்கப்பெற்றோம்.

கல்லூரி மாணவனாக விளங்கிய போது நண்பர்களைச் சந்திப்பதற்கென்றே ஜெயகாந்தன் வைத்திருந்த அறையொன்றில்

முதல் முறையாக அவரைச் சந்தித்தோம். பின்பு பலமுறை சந்தித்துப் பேசுகிற வாய்ப்புக் கிடைத்தது.

எம்முடைய ‘ வரலாற்றுப் பாதையில் ’ நூலுக்கு முன்னுரை எழுதிக்கொடுத்தார். மிகவும் இளம் வயதிலேயே அவரின் நூலொன்றைத் திறனாய்வு செய்து அவர் முன்னிலையிலேயே பேசும் சந்தர்ப்பமும் அமைந்தது.

ஈரோட்டில் நடைபெற்ற பல முக்கிய நிகழ்வுகளுக்கு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரை நிகழ்த்த ஜேகே அவர்களை அழைத்துள்ளோம்.

2002ஆம் ஆண்டிற்கான மக்கள் சிந்தனைப் பேரவையின் ‘ பாரதி விருது ’ ஜேகே அவர்களுக்கு ஈரோட்டில் வழங்கப்பட்டது. அவ்விழாவில் ஜேகே முத்திரை பதிக்கதக்க உரை நிகழ்த்தினார். 2006 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவில் ‘ புத்தகம் ’ என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார் ஜேகே.

எமது இல்லத்திற்கு வருகை புரிந்துள்ளார் ஜேகே. மற்றொருமுறை எமது குடியிருப்புப் பகுதியிலுள்ள ஊர்ப்புற நூலகத்தின் வாசகர் வட்ட நிகழ்விலும் உரையாற்றியுள்ளார்.

------------ ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற எமது ‘ வரலாற்றுப் பாதையில் ’ நூல் வெளியீட்டு விழாவிற்கு ஆட்டோவில் வந்து இறங்கி பார்வையளர் வரிசையில் கம்பீரமாக அமர்ந்திருந்த ஜேகேவின் பண்பு வணங்கத்தக்கதாகும்.

ஈரோடு வந்தால் நிகழ்ச்சி முடிந்த பிறகு சிலசமயம் ஒருநாள் சேர்த்து எங்களோடு இருந்து உரையாடி மகிழ்ந்து அடுத்தநாள் விடைபெறுவார் ஜேகே.

ஒருஞானி , கரடுமுரடானவரைப் போன்ற தோற்றத்திற்கும் குழந்தையைப் போன்ற உள்ளத்திற்கும் உரியவராக ஏககாலத்தில் திகழமுடியும் என்பதற்கு ஜேகே. மிகப் பொருத்தமான உதாரணம்.